

# இடம் பொருள் கலைஞர்

94

**மகிழவன்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் இளம் சிறார் மற்றும் பள்ளி சிறார் இருதய சிகிச்சைத் திட்டம்!



● முதலமைச்சர் கலைஞரிடம் 16.1.2010 நடிகர் ராகவா லாரன்ஸ் நடத்தும் அறக்கட்டளையில் வசித்து வந்த இருதய பாதிப்புடைய சிறார்களுக்கு சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவர்கள் தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து தங்களது நன்றிகளைத் தெரிவித்தனர்.

# இளம் சிறார் மற்றும் பள்ளி சிறார் இருதய சிகிச்சைத் திட்டம்!

## இந்தியாவிற்கு முன்னோடித் திட்டம்

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்ற முதுமொழிக்கேற்ப முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு, தமிழ்நாட்டில் பதவி ஏற்றபோதெல்லாம் மக்கள் நோயற்ற நல்வாழ்வு வாழ்வதற்கான பல்வேறு மக்கள் நல திட்டங்களைத் தீட்டி சிறப்பாகச் செயலாற்றி மக்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்தில் மற்ற மாநிலங்களைவிட, தமிழ்நாட்டை முன்மாதிரி மாநிலமாக உருவாக்கியவர் கலைஞர். அதன் ஒரு சான்றுதான், இளம் சிறார் மற்றும் பள்ளி சிறார் இருதய சிகிச்சைத் திட்டம்.

### வாழ்வொளித் திட்டம்

1999-ஆம் ஆண்டு, சென்னை பல்கலைக் கழகத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில்,சென்னை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் தலைமைப் பேராசிரியர் இருதய சிகிச்சை நிபுணர் மறைந்த டாக்டர் விக்டர்ஸ் சாலமன் அவர்கள் ருமாட்டிக் ஹார்ட் டிசீஸ் என்னும் இருதய நோய், தமிழ்நாட்டு மக்களிடம் 28 சதவிகிதம் பரவி இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

இந்தநோய் பாதிப்பு ஏற்பட்டால், இருதயக் குழாய் மாற்று அறுவை சிகிச்சைதான் தீர்வு என்னும் நிலை இருந்தது. அறுவை செய்யும் நிலையைக் குறைப்பதற்குத் தொடக்கத்திலேயே பள்ளிக் குழந்தைகள் அளவில், இந்த நோயின் தாக்கத்தைக் கண்டறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதே தீர்வாக இருக்கும் என்று தனது ஆய்வுக் கட்டுரையில் கூறியிருந்தார்,

அந்தச் செய்தியை பேராசிரியர் நாகநாதன் வழியாக அறிந்த கலைஞர் அவர்கள், உடனடியாக டாக்டர் விக்டர்ஸ் சாலமன் கூறிய தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில், சளி, இருமல், காய்ச்சல் தொடங்கி, இருதயப் படபடப்பு ,மூட்டு மற்றும் கை கால்களில் வீக்கம் ஏற்படும் குழந்தைகளை ஆசிரியர்களின் வழியாகக் கண்டறிந்து, அவர்களுக்கு ஒரு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டு, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பரிசோதித்து, அவர்களுக்கு பத்து ஆண்டுகளுக்குப் பென்சிலின் ஊசி அல்லது மாத்திரை வழங்கும் வாழ்வொளித் திட்டத்தைச் செயல்படுத்தினார். இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாக 1996-ஆம் ஆண்டு 28 சதவிகிதம் ருமாட்டிக் ஹார்ட் டிசீஸ் நோயால் பாதிக்கப்பட்டு இருந்தவர்களின் எண்ணிக்கை, 2016-ஆம் ஆண்டு 0.8 சதவிகிதமாகக் குறைந்தது.

### இளம் சிறார் இருதயத் திட்டம்

கட்டாய இருதய அறுவை சிகிச்சை செய்திட வேண்டும் என்னும் சூழலில், இருந்த ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த சிறார் இருதயக் குறைபாட்டுடன் பிறந்த குழந்தைகள் இருதய நோய் அறுவை சிகிச்சைக்காக, சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை, மதுரை ராஜாஜி மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய மூன்று இடங்களில் பதிவுசெய்து காத்திருக்கும் நிலை நிலவியது.

> **தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் மூன்று வகையான இருதய அறுவை சிகிச்சைக்கான கட்டண விவரம் :**
>
> - வகை-அ. (மூடிய நிலையில் அறுவை சிகிச்சை) - ரூ.30,000.
> - வகை-ஆ. (எளிதான திறந்த இருதய அறுவை சிகிச்சை) - ரூ.50,000.
> - வகை-இ. (சிக்கல் நிறைந்த திறந்த இருதய அறுவை சிகிச்சை) - ரூ.1,00,000.
>
> இந்தச் செலவுகளை அரசே ஏற்றுக் கொள்கிறது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 27 தனியார் மருத்துவமனைகளில் உடனடியாக அறுவை செய்து கொள்ள ஏதுவாக **‘இளம் சிறார் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம்’** என்னும் திட்டத்தை 21.11.2007 அன்று தொடங்கி வைத்தார்.

### பள்ளி சிறார் இருதய திட்டம்

இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டத்தை மேலும் விரிவாக்கும் நோக்கில், அன்றைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், கலைஞரின் 85-வது பிறந்த நாளான 3.6.2008 அன்று சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் மாண்புமிகு முதலமைச்சரின் இளம் சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியான - பள்ளி சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

> **தமிழ்நாட்டில் கலைஞர் உருவாக்கிய சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, இந்திய ஒன்றியம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான சிறார்கள் பயன்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

மாவட்ட ஆட்சியர் தலைமையில் இத்திட்டத்தினைக் கண்காணிக்க, சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரி முதல்வர், இணை இயக்குநர், துணை இயக்குநர், இருதய நோய் மருத்துவர்கள் மற்றும் பிற மருத்துவர்கள், பேராசிரியர்கள், ஆகியோர் உள்ளிட்ட மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுவினர் மாவட்ட அளவில், இத்திட்டத்தைக் கண்காணித்து, அறுவை சிகிச்சை முகாம்களை நடத்துகின்றனர்.



● முத்தமிழறிஞர் கலைஞரிடம் 18-8-2008 அன்று இளம் சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இருதய அறுவை சிகிச்சை செய்துகொண்ட சிறுவர்கள் தலைமைச் செயலகத்தில் பெற்றோர்களுடன் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

### சிறார்களுக்கு உயர் சிகிச்சை


அறுவை சிகிச்சைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறார்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தமிழ்நாடு முழுக்க அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், சென்னை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துமனையில் மட்டும் 2007 முதல் 2009 வரை மூன்று ஆண்டுகளில், 1800 குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தமிழ்நாடு முழுக்க அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் 2009-ஆம் ஆண்டு வரை 9 ஆயிரத்து 800 சிறார்களுக்கு, அறுவைச் சிசிக்சை செய்யப்பட்டுள்ளது. அறுவைச் சிகிச்சைக்கான முழுசெலவையும் அரசு ஏற்று, இன்றளவும் செய்து வருகிறது.

### ஒன்றியத்திற்கு வழிகாட்டிய திட்டம்

சிறார்களுக்கான இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் ஒன்றிய காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி ஆட்சியில், மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலத்தில், 2013-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தேசிய குழந்தைகள் நலத்திட்டத்தில் (RBSK -Rashtriya Bal Swasthya Karyakram) இணைக்கப்பட்டு, தமிழ்நாட்டில் கலைஞர் உருவாக்கிய சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, இந்திய ஒன்றியம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான சிறார்கள் பயன்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**...வலம் வருவோம்**

## டிராட்ஸ்கி மருதுக்கு வாழ்த்துகள்!



தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் தலைவராக ஓவியர் டிராட்ஸ்கி மருது நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திரைக்கதை மற்றும் இயக்கம், ஒளிப்பதிவு, ஒலிப் பதிவு மற்றும் ஒலிப் பொறியியல், திரைப்பட எடிட்டிங் மற்றும் திரைப்படச் செயலாக்கம் போன்ற பயிற்சிகள், எம்.ஜி.ஆர். ஃபிலிம் இன்ஸ்ட்டியூட், நிறுவனத்தில் அளிக்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தின் தலைவராக டிராட்ஸ்கி மருது நியமிக்கப்பட்டுள்ளதற்கு பலரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

ஓவியர் டிராட்ஸ்கி மருது, 1953-ஆம் ஆண்டு மதுரையில் பிறந்தவர். இளவயது முதலே ஓவியக் கலையில் ஆர்வம் கொண்டு, சுவர் ஓவியங்களை வரையத் தொடங்கி, இன்று நவீன ஓவியராக தனது அடையாளத்தை நிலைநிறுத்தியவர்.

வெகுமக்கள் ஊடகங்களில் செயல்பட்டு, நவீன ஓவியத்தை அவர்களிடம் கொண்டு சென்ற மருது, இந்தத் துறையில் கணினியைப் பயன்படுத்தியதில் முன்னோடியானவர். இளங்கலைஞர்களை நவீன ஓவியத்துறையில் ஊக்கப்படுத்தி வளர்த்தவராகவும் கவனிக்கப்படுபவர். தமிழ்நாடு அரசின் சிறந்த ஓவியர் விருதையும், 2007-ஆம் ஆண்டு ‘கலைமாமணி’ விருதையும் பெற்றவர் டிராட்ஸ்கி மருது.

கலைஞரால் போற்றப்பட்ட மருது, தமிழ்நாடு திரைப்பட நிறுவனத்தின் தலைவர் பொறுப்புக்கு வருவது, வரவேற்புக்கும் வாழ்த்துக்கும் உரியது.

## :ப்ளாஷ்பேக்



### கொடுங்கோல் ஆட்சியில் இளைஞர் அணி!



க.அன்பழகன்

1995-ஆம் ஆண்டு ஜெயலலிதா அரசின் கொடுங்கோல் ஆட்சியின் கடைசி காலகட்டத்தில், அவ்வை சண்முகம் சாலையில் இளைஞர் அணி சார்பில் பொதுக் கூட்டம், தற்போதைய நம் கழகத் தலைவர் தளபதி தலைமையில் நடைபெற்றது. சிறப்புச் சொற்பொழிவாக ‘கழகத்தின் இடிமுழக்கம்’ இரா.வெற்றிகொண்டான் அவர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார். கூட்டத்துக்குத் தலைமை ஏற்ற அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தலைவர் தளபதி அவர்கள் எனக்கு சால்வை அணிவித்து சிறப்பு செய்தார்.

**– க.அன்பழகன், வட்ட அவைத் தலைவர், ஆயிரம்விளக்கு, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மசூலிப்பட்டினத்தில் பெரியார்!


1941-ஆம் ஆண்டு, பிப்ரவரி 16-ஆம் தேதி நீதிக்கட்சியினுடைய நிர்வாக சபைக் கூட்டம் மசூலிப்பட்டினத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த பெரியார் அவர்களுக்கு, மிகப்பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்து மகா சபைக்காரர்களும், ஆரியர்களும் பயந்து, பெரியார் வருகைக்கு எதிர்ப் பிரச்சாரம் செய்தார்கள்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

659

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131